செ.வெ.எண்: 59 நாள்: 28.01.2018

# புதுக்கோட்டை மாவட்டம்

# புதுக்கோட்டை காமராஜபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு பல்ஸ் போலியோ சொட்டு மருத்து வழங்கினார்.

புதுக்கோட்டை காமராஜபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (28.1.2018) நடைபெற்ற பல்ஸ் போலியோ செட்டு மருத்து வழங்கும் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு பல்ஸ் போலியோ சொட்டு மருத்து வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது,

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று (28.1.2018) மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அனைத்து அரசு மருத்துவ மனைகள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் உள்ளிட்ட 1,362 மையங்களில் காலை 7.00 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்த முகாம்கள் இன்று மாலை 5 மணி வரை நடைபெறும். இந்த முகாம்களில் ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், ஏற்கனவே எத்தனைமுறை சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் மீண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். இம்முகாம்களுக்கு தேவையான போலியோ சொட்டு மருந்து பல்வேறு அரசு துறைகளைச் சார்ந்த 100-க்கும் மேற்பட்ட வாகனங்கள் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து குறிப்பிட்ட குளிர்பதன நிலையில் எடுத்துச் சென்று 67 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளது இம் முகாமினை நடத்திட சுகாதாரம், மருத்துவம், வருவாய், சத்துணவு, கல்வி, ரோட்டரி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா துறைகளைச் சேர்ந்த 5,443 - க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்..

ஒவ்வொரு சொட்டு மருந்து மையத்திலும் நான்கு பணியாளர்கள் மையத்திற்கு வரும் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்குவார்கள். அடுத்த சில நாட்களில் இவர்கள் இரு குழுக்களாக பிரிந்து வீடு வீடாகச் சென்று விடுபட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவார்கள்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இன்று மீண்டும் போலியோ சொட்டு மருந்து போட்டுக்கொள்ள வேண்டும். புதிதாக பிறந்த குழந்தைகளையும் முகாமிற்கு அழைத்து சென்று போலியோ சொட்டு மருந்து போட்டுக்கொள்ள வேண்டும். சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு இடது கை சுண்டு விரலில் அடையாள மை வைக்கப்படுகிறது. இதன் மூலம ் விடுபட்ட குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். மேலும் இன்றைய தினம் தனியார் மருத்துவமனைகளிலும் போலியோ சொட்டு மருந்து வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வயல்களில் குடியிருப்போர், சாலையோர குடியிருப்புகள், செங்கல் கால்வாய் குடியிருப்புகள், கல் குவாரிகள், பஸ் நிலையங்கள், திருவிழா கூட்டங்கள், ரயில் நிலையங்கள், சுங்கச்சாவடிகள் போன்ற பகுதிகளில் இருக்கும் குழந்தைகளுக்கும், விடுபடாமல் சொட்டு மருந்து வழங்க நடமாடும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் பொது மக்கள் அனைவரும் தங்களது குழந்தைகளுக்கு இன்று நடைபெறும் முகாமில் தவறாமல் சொட்டு மருந்து போட்டு பயனடைய வேண்டும்.

5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இரண்டாம் தவணை போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமானது 11.3.2018 அன்று நடைபெற உள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் செல்வி கெ.எம்.சரயு.இ.ஆ.ப, புதுக்கோட்டை மாவட்ட போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி கண்காணிப்பு அலுவலர் மரு.ஜெயஸ்ரீ, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பரணிதரன், நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவா சுப்பிரமணியன் உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள், பெற்றோர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**